செய்தி வெளியீடு எண்: 082 நாள்: 29.01.2020

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியினை இணையதளத்தின் வாயிலாக செலுத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கென இணையதளம் (https:\\lwb.tn.gov.in) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தலைவருமான டாக்டர் நிலோபர் கபில் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 78–வது கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தையற்பயிற்சி பயிலும் தொழிலாளர்களைச் சார்ந்தோருக்கு தையல் இயந்திரம் பரிசு வழங்குதல், பள்ளிகளில் பயிலும் தொழிலாளர்களின் பிள்ளைகள் பயன்பெறும் விதமாக கல்வி உதவித்தொகையாக Pre-K.G. முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.1000/–, 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.2,000/– 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.3,000/– உதவித் தொகையாக வழங்கலாம் எனவும், விளையாட்டுத் திறன் மிக்க தொழிலாளர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெறும் மாவட்ட அளவிலான உள்விளையாட்டு/வெளி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதிபெறும் மாணவர்களுக்கு ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை – ரூ.3000/–, ஒன்பதாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ரூ.5000/– விளையாட்டு உதவித் தொகையும், விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் முதலாவதாக தகுதி பெறும் மாணவருக்கு ரூ.50,000/–ம், இரண்டாவதாக தகுதி பெறும் மாணவருக்கு ரூ.30,000/–ம், மூன்றாவதாகத் தகுதி பெறுபவருக்கு ரூ.20,000/–ம் விளையாட்டு உதவித் தொகையாக வழங்கவும், தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மாதிரி வினாத்தாள் மற்றும் பயிற்சி கையேடு இலவசமாக வழங்குதல், உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் எழுதும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பயிற்சி உதவித் தொகை வழங்குதல், போன்ற புதிய நலத் திட்டங்கள் குறித்து தீர்மானிக்கப்பட்டது. **மேலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவது குறித்து தீர்மானிக்கப்பட்டது.**

இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக இன்று **(29.01.2020)** சென்னை டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள ஜீவா இல்லம், இணைப்புக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, தொழிற்சங்க மகளிர் தங்குவதற்காக மேம்படுத்தப்பட்டு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தலைவருமான டாக்டர் நிலோபர் கபில் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் முனைவர் இரா.நந்த கோபால், இ.ஆ.ப. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். V. P. B. பரமசிவம், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு கா.மனோகரன், நிதித்துறை துணைச் செயலாளர் திரு ஆர். இராமநாதன், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் திரு. கே.மாணிக்கம் (EFSI), திரு கே.எம்.ஜி. கணேஷ் (SIMA), திரு. ஆர்.இராதாகிருஷ்ணன் (AIMO), திரு. பா. ராம்குமார் (PAT), திரு எம்.பயாஸ் அகமது (AISHTMA), தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் திரு தாடி.ம.ராசு (ATP), திரு. எம். அப்துல் ஹமீது (ATP), திரு. டி.எம். மூர்த்தி (AITUC), திரு. வி. குமார் (CITU), மற்றும் நியமன உறுப்பினர் திருமதி பாத்திமா வசந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் நிறைவாக வாரியச் செயலாளர் திருமதி. உ.உமாதேவி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**